தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 20, பவ - திருவள்ளுவர் ஆண்டு-2026

1995, ஏப்ரல் 3, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு".

தம் நிலைமையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக் கொள்ளாது; ஆகையால், உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

எத்தனையோ பேர்கள் ஏற்றுக்கொள்ளாத செயல்களைச் செய்து கொண்டிருக்கிறார்களே என்பதற்காக இக்குறள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 181, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு உணவு அமைச்சர்.

181—

நியாய விலைக்கடைகள் மூலம் டீசல் விநியோகம்

***19323—**திரு. கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில், நீர் இறைக்க ஆயில் மோட்டார்கள் நிறைய பயன்படுத்தப்படுவதால் இதற்கு தேவையான டீசலை நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆயில் மோட்டார்களுக்குத் தேவையான டீசலை நியாயவிலைக் கடைகள் மூலம் வினியோகிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) எனவே, அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையிலே, நம்முடைய அரசு, இந்தியத் துணைக் கண்டத்திலே, பல பரிசுப் பொருள்களைப் பெற்றிருக்கிறது. விவசாயிகள், தங்களுக்கு வேண்டிய டீசலை, நகர்ப் பகுதிகளிலுள்ள பெட்ரோல் பங்குகளுக்குச் சென்று வாங்க வேண்டியுள்ளது. விவசாயிகள் 5 லிட்டர், 10 லிட்டர் என்று கேட்கிறபோது, அதனுடைய அளவு குறைக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், டீசலை நியாயவிலைக் கடைகளில் விற்க மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் எண்ணெயை நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்வது என்பது, இன்னும் பல சிக்கல்களை உருவாக்கும். ஆகவே, அந்த யோசனை ஏற்கக் கூடியதல்ல. இப்போது, பெட்ரோல், டீசல் பங்குகளில் அது முறையாக வழங்கப்பட்டு வருகிறது. தட்டுப்பாடின்றியும் கிடைக்கிறது. அதை நம்முடைய நியாயவிலைக் கடைகளுக்குக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு வினியோகிப்பது என்பதில் பல சிக்கல்கள் எழும். இப்போதே மண்ணெண்ணெய் வழங்குவதில் பல புகார்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. அதை நாம் சரியாக நிர்வகிப்பதற்கு மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். மக்களுடைய முழுமையான திருப்தியை அதிலே இன்னும் பெறமுடியாமல், முயற்சிகளை மீண்டும் மீண்டும் எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, இந்தச் சூழ்நிலையில், மேலும் ஒரு சுமையை, தேவையற்ற சுமையை, டீசலை நியாயவிலைக் கடைகளின் மூலம் வழங்குவதன் மூலம், அரசு ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

1995 ஏப்ரல் 3]

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே, வயதான குறு விவசாயிகளுக்கு உதவித் தொகையாக ரூ. 100 அளித்திருக்கிறார்கள். அப்படி விவசாயிகளினுடைய நலன் கருதுகிறது இந்த அரசு. விவசாயிகளுக்குத் தேவையான டீசலை பெறுகின்றபோது, நகர்ப்புறங்களிலே இருந்து பேருந்துகளிலே அதனை வாங்கி வருகிறபோது, அவ்வாறு அதை எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, குறைந்தபட்சம் இந்த டீசலை விற்க கிராமப்புறங்களிலே வியாபாரிகளுக்கு—முன்பு உரிமம் வழங்கியதை, நிறுத்தி வைக்கப்பட்டதாக அறிகிறேன்; எனவே, கிராமப்புறங்களிலே உள்ள வியாபாரிகளுக்கு மீண்டும் டீசலை விற்க—உரிமம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டீசல் எண்ணெய் விற்பனை என்பது, 1980 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஓர் அரசாணையின் மூலம் நிர்ணயிக்கப்பட்டு, விற்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று, கிராமப்புறங்களில் இந்த டீசல் எண்ணெயை, வியாபாரிகளை வைத்து விற்பதற்கு முன்பு அனுமதித்து, பின்னாலே, அது நிறுத்தப்பட்டிருக்குமானால், அது குறித்து மீண்டும் அரசு விசாரித்து, பரிசீலித்து, தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தணிகைபாபு.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டீசல் பங்கில் விற்கப்படுகிற டீசலையெல்லாம் கலப்படமாக விற்கிறார்கள். இந்த டீசலை சுத்தமாக விற்பதற்கு, கலப்படம் இல்லாமல் விற்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் எண்ணெயிலே அப்படி ஏதாவது கலப்படங்கள் செய்து விற்கப்படுமேயானால், அதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு, இப்போது அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் சோதனையிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று ஏதாவது குறிப்பிட்ட கடைகளிலே அல்லது பங்குகளிலே அப்படிப்பட்ட

தவறுகள் நிகழ்கிறது என்று அவர்களுக்குத் தெரிந்தால் அந்தக் குறிப்பிட்ட கடை அல்லது பங்கை அதிகாரிகளுக்கு உறுப்பினர் தெரிவித்தால் அவர்கள் தக்க நடவடிக்கையை எடுப்பார்கள். இப்போதும் சட்டத்தின்படி அப்படி கலப்படம் செய்து விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 182, திரு. எஸ். ஆர். ஜெயராமன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

182—

மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு கூடுதல் வசதி

9527—திரு. எஸ். ஆர். ஜெயராமன் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குண்டான வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவ்வசதிகள் செய்து தரப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு உண்டான பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இவர்களெல்லாம்—சென்னையிலே இருந்து சீனியாரிட்டி அடிப்படையிலே நியமிக்கப்படுகிறவர்கள்—சேலத்திற்கு வந்து அவர்களெல்லாம் பணியாற்றுவதற்குப் பதிலாக லீவு போட்டுவிட்டு வந்து விடுகிற காரணத்தினால், அங்கே படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு உண்டான சூழ்நிலைகள் இல்லாமல் இருக்கிறது. போஸ்ட் மார்ட்டம்